முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.197/2014**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 09.10.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 09.10.2025 | சாட்சி | வா.சா.1 |
| பெயர். | மாணிக்கவாசகன் | வயது.. | 53 |
| தந்தை பெயர். | ராமச்சந்திரன் | கிராமம்.. | பெரியநற்குணம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. என்னிடம் சர்வே எண்.94/8B1 -க்கு பட்டா உள்ளது. மேற்சொன்ன பட்டா நீதிமன்றத்தில் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா என்னிடம் மாறியுள்ளது, சிட்டா தாக்கல் செய்திருக்கிறேன். பட்டா எந்த வருடம் என் பெயரில் மாறியுள்ளது என்றால் டிசம்பர் 2013 ஆம் ஆண்டு இருக்கும். அதற்கு முன்பாக பட்டா தங்கவேல் பெயரில் இருந்தது. நான் பட்டா மாற்றுவதற்கு தங்கவேல் உயில் ஆவணத்தை VAO விடம் கொடுத்தேன். ராசாயாளுக்கு எழுதப்படிக்க தெரியாது, கைரேகை வைப்பது தான் பழக்கம் என்றால் சரிதான். 14.04.1991 ராசாயாள் உயில் எழுதி வைத்திருக்கிறாரா என்றால் இல்லை. தங்கவேல் இறந்த பிறகு வழக்கு சொத்தை யார் அனுபவித்து வந்தார் என்றால் எனது தந்தை ராமசந்திரன் அனுபவித்து வந்தார். ராமசந்திரன் பெயரில் பட்டா மாறவில்லை. எனது தந்தை ராமசந்திரன் 2002 இல் இறந்தார்.

2. வழக்கு சொத்து சர்வே எண்.94/8B1 விஸ்திரணம் 18 செண்ட் ஆகும். மீதம் 18 செண்ட் நாகராசு வகையறாவிடம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து என் வசம் இல்லை என்றாலும் நான் பயிர் செய்யவில்லை என்றாலும் எனது தந்தை தான் குத்தைக்கு கொடுத்திருந்தார், தந்தை இறந்த பிறகு வழக்கு சொத்து தங்களது சொத்து என்று பிரதிவாதிகள் பிரச்சனை செய்கிறார்கள். 1998 இல் குத்தகைக்கு எனது தந்தை நாகராசுவிற்கு கொடுத்திருந்தார். நாகராசு இறந்து 4 வருடம் ஆகிறது. எனது தந்தையாருக்கும் நாகராசுக்கும் குத்தகை பத்திரம் உள்ளதா என்றால் இல்லை வாய்மொழி குத்தகை தான். குத்தகை எவ்வளவு என்றால் 1 போகத்திற்கு 1 மூட்டை நெல் ஆகும், 2 போகம் என்றால் 2 மூட்டை ஆகம். நாகராசு வகையறா எனக்கு குத்தகைக்கு நெல்

மூட்டை கொடுத்தார்களா என்றால் இல்லை எனது தந்தை இருந்தவரை கொடுத்தார்கள். எனது தகப்பனார் இறந்தவரை குத்தகை ரசீதோ அல்லது குத்தகை பற்றி குறிப்போ எழுதி வைத்திருந்தாரா என்றால் இல்லை. எனது தந்தை வாய்மொழி குத்தகை விடவில்லை என்றாலும், குத்தகைக்கு நெல் மூட்டை வாங்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

3. குத்தகை பதிவு செய்யப்பட்டால் தான் அடங்கல் உள்ளிட்ட ஆவணங்களில் குத்தகை தாரர்கள் பெயர் வரும் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் பெயரில் பட்டா மாற்றும் போது விசாரணை நடந்ததா என்றால் VAO கிராமத்தில் விசாரித்தார். VAO விடம் மனு கொடுத்து பட்டா மாற்றிக்கொண்டேன் என்றால் சரிதான். வருவாய்துறையில் இருக்கும் செல்வாக்கை பயன்படுத்தி தான் எனது பெயரில் பட்டாவை மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல, எனக்கு செல்வாக்கு இல்லை நான் 5 ம் வகுப்பு தான் படித்துள்ளேன். வழக்கு சொத்து எந்த காலத்திலும் எனது அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.